புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. த. நாராயணன், B.Sc., M.B.A.,

ந.க.எண்.8402/2025/எப்1 நாள்.12.03.2026

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - புதுக்கோட்டை மாநகராட்சி - வாகவாசல் கிராம சர்வே எண்.147/2A,3A,4A, 148/4B3A,5A,5B உள்ள 8506ச.மீ (2.10ஏக்கர்) பரப்பில் 43 குடியிருப்பு மனைகள் கொண்ட மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டது - குடியிருப்பு மனைப்பிரிவுக்கு இறுதி ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. திரு.N.குலசேகரன் என்பவர் இணைதளம் மூலம் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, புதுக்கோட்டை அவர்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்த எண்.XLBFAQ24, நாள்:06.08.2025.
2. தானபத்திரம் ஆவண எண்.6671/2025, நாள்.18.09.2025.
3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, புதுக்கோட்டை அவர்களின் தொழில்நுட்ப அனுமதி ந.க.எண்.XLBFAQ24/2025/TCP, நாள்:25.09.2025.
4. மாமன்ற தீர்மான எண்:237, நாள்:06.03.2026.

.....

உத்தரவு :-

பார்வை 1ல் காணும் மனுதாரர் புதுக்கோட்டை மாநகராட்சி வாகவாசல் கிராம சர்வே எண்.147/2A,3A,4A, 148/4B3A,5A,5B உள்ள 8506ச.மீ (2.10ஏக்கர்) பரப்பில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைக்க தொழில்நுட்ப அனுமதி வழங்க கோரி விண்ணப்பித்து கொண்டதின் பேரில் ஆவணங்கள் பரிசிலிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பார்வை-2ல் காணும் பத்திர ஆவணப்படி சாலை மற்றும் பொது உபயோக இடம் தான பத்திரம் ஆவண எண்.6671/2025, நாள்.18.09.2025ன் படி ஆணையாளர் பெயருக்கு பத்திர பதிவு செய்யப்பட்டு தானமாக பெறப்பட்டுள்ளது.

பார்வை 3ல் உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறை, புதுக்கோட்டை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.XLBFAQ24/2025/TCP, நாள்:25.09.2025ன் படி, உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு SWP/LP/D.DTCP(PD)No:86/2025 என எண்ணிடப்பட்டு 43 குடியிருப்பு மனைகளாக பிரித்து மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து, பார்வை-4ல் காணும் இம்மாமன்ற தீர்மானத்தில் மனைப்பிரிவிற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

ஆணையாளர் 24/3/2022

புதுக்கோட்டை மாநகராட்சி (6/6)

இணைப்பு :-

நகர் ஊரமைப்பு துறையின் நிபந்தனைகளுடன் கூடிய மனைப்பிரிவு வரைப்படம் - 1.

பெறுநர் :-

திரு.N.குலசேகரன், த/பெநடனசுந்தரம்,
1856, ஜீவா நகர் 2ம் வீதி,
புதுக்கோட்டை.
செல்.9865384422

நகல் பணிந்தனுப்பப்படுகிறது :-

1. துணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், புதுக்கோட்டை.
2. சார்பதிவாளர், புதுக்கோட்டை.
3. வட்டாட்சியர் மற்றும் நில அளவையர், புதுக்கோட்டை இம்மனைப்பிரிவில் அமையும் பொது இடம் மற்றும் சாலை ஆகியவற்றை உட்பிரிவு செய்து மாநகராட்சி ஆணையர் பெயருக்கு பட்டா வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ள மற்றும் மனை உட்பிரிவு பணிகளை கண்காணித்து உட்பிரிவு மேற்கொள்ளப்பட வேண்டியது.
4. மாநகராட்சி பொறியாளர் இம்மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலையை சாலை பதிவேட்டில் பதிந்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது.